JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW-   -Pw- 2- Witness
for Prosecution

CC.No. 345/2025   Crime No. 933/2024   Station PEW Gobi

| | | | |
|---|---|---|---|
| Name | PW.2– குமாரசாமி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 11.05.2026 | | | |

எதிரி ஆஜர்

நான் தற்போது வரப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கோபி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 12.12.2024 தேதியன்று நிலைய காவலர்கள் காமராஜ் மற்றும் சுரேஷ்குமார் ஆகியோருடன் மதுவிலக்கு குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபொழுது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி பவானி காவல் நிலைய சரகம் மயிலம்பாடி லட்சுமி நகர் டவர் அருகில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த ஆஜர் எதிரி எங்களை பார்த்ததும் தப்பி ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தன்னுடைய பெயர் முகவரியை முதலில் மாற்றி மாற்றி கூறியவர். பின்னர் தனது பெயர் அம்மாசை என்றும் தனது முகவரியையும் கூறினார். அவரிடம் இருந்த பையை சோதனை செய்த போது அது தமிழக அரசு மதுபானம் 180 ml அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள்– 26 இருந்தது. அவரை விசாரித்த போது தான் தமிழக அரசு டாஸ்மாக் கடைகளில் வாங்கி தமிழக அரசு மதுபான கடை மூடிய நேரத்தில் தனது சுயலாபம் கருதி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் 15.30 மணிக்கு கைது செய்தும், எதிரி தன் கையில் வைத்திருந்த பையை தானாக முன்வந்து எடுத்து ஆஜர் செய்ததை பொதுமக்கள் யாரும் சாட்சியமளிக்க முன் வராததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் அவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் அன்றைய தினம் 15.45 மணிக்கு கைப்பற்றினேன். பின்னர் காவலர்கள் இருவரிடமும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் பெற்றேன். எதிரிகள் மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துடன் நிலையம் வந்து அன்றைய தினம் 17.00 மணியளவில் நிலைய குற்ற எண் 933/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(C) OF TNP ACT கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை ஆ.சா.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க பிணையில் விடுவித்தேன். படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 ஆ.சா.3 குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் வந்த காவலர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே எனது புலன் விசாரணையை முடித்து 12.12.2024 தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) OF TNP ACT கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாததால் மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.11 18:08:01 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw- 1- Witness
for Prosecution

CC.No. 345/2025 Crime No. 933/2024 Station PEW Gobi

| | | |
|---|---|---|
| Name | **PW.1–காமராஜ்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 11.05.2026 | | |

**எதிரி ஆஜர்**

**நான் தற்போது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கோபிசெட்டிபாளையம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்த பொழுது கடந்த 12.12.2024 ஆம் தேதியன்று நிலையை சிறப்பு உதவியாளர் குமாரசாமி என்பவர் என்னையும் காவலர் சுரேஷ்குமார் என்பவரையும் அழைத்துக் கொண்டு மதுவிலக்கு குற்றங்கள் தொடர்பாக ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த பொழுது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி பவானி காவல் நிலைய சரகம் தளவாய்பேட்டை ஆற்றுப்பாலம் அருகில் ஆஜர் எதிரி எங்களை பார்த்ததும் தப்பி ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தன்னுடைய பெயர் முகவரியை முதலில் மாற்றி மாற்றி கூறியவர். பின்னர் தனது பெயர் விஜயலட்சுமி என்றும் தனது முகவரியையும் கூறினார். அவரிடம் இருந்த பையை சோதனை செய்த பொழுது அதில் 180 எம்எல் அளவுள்ள BLACK PEARAL BARANDY பாட்டில்கள்– 5 இருந்தது. அவரை விசாரித்த போது டாஸ்மாக் கடைகளில் வாங்கி அரசு மதுபான கடைகள் மூடிய நேரத்தில் தனது சுயலாபம் கருதி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைது செய்வதற்கான காரணத்தை கூறி அன்றைய தினம் 10 மணிக்கு கைது செய்தும் எதிரி தான் வைத்திருந்த பையில் இருந்து**

தானாக முன்வந்து எடுத்து ஆஜர் செய்த 180ml அளவுள்ள BLACKPEARAL BRANDY பாட்டில்கள்– 5 ஐந்தினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் சிறப்பு உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பொதுமக்கள் யாரும் சாட்சியமளிக்க முன் வராததால் நாங்கள் இருவரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் ஆ.சா.1 குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் உள்ள பாட்டில்களை தான் அன்றைய தினம் சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். 180 ml அளவுள்ள BLACK PEARAL BARANDY பாட்டில்கள்– 5 ஆ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்ளுடன் நிலையம் வந்து அன்றைய தினம் பகல் 11.15 மணிக்கு நிலை குற்ற எண் 784/2024 சட்டப்பிரிவுகள் 4(1)(a) TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சொத்தின் மதிப்பு எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் வழக்குச் சொத்தின் சீரியல் எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்தை கைப்பற்றும் போது வீடியோ பதிவுகள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை கைப்பற்றும்போது அரக்கு சீல் எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் கண்காணித்துக் கொண்டிருந்தபோது எதிரி யாருக்கும் விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரி யாருக்கும் மதுபாட்டில் விற்கவில்லை என்றாலும், நாங்கள் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், புள்ளிவிவரக்கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கில் நான் போய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.05.11 18:08:09 +0530

Sd/– (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani